**மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்**-

**அசா.2- ஜானகி**

**S.C.63/2021**

**தேதி**-18.07.2022

**குறுக்கு விசாரணை**-

சம்பவ சமயத்தில் நான் P&T Quarters ல் E block ல் குடியிருந்து வந்தேன். அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு துறையில் பணியாற்றும் நபர்களுக்கு ஒதுக்கப்படும் quarters என்றால் சரிதான். நானோ, என்னுடைய கணவரோ P&T department ல் ஊழியர் கிடையாது என்றால் சரிதான். சம்பவ காலக்கட்டத்தில் நான் P&T Quarters ல் குடியிருக்கவில்லை, இரத்தினபுரியில் தான் குடியிருந்தேன் என்றால் சரியல்ல. இறந்த உஷாராணி என்னுடைய அக்கா என்னைவிட 3 வருடம் மூத்தவள். உஷாராணிக்கு திருமணம் ஆனவுடன் ஒரு பெண் குழந்தை பிறக்கும்போதே(still born) இறந்துவிட்டது என்றால் சரிதான். உஷாராணிக்கு மாதவிடாய் முறையாக வராததால் சாய்பாபா காலனி குரு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பிருந்து இந்த பிரச்சனை அவருக்கு இருந்தது என்றால் சரிதான். மாதவிடாய் சீராக வராததால் அந்த சமயத்தில் உஷாராணி மனஎரிச்சலோடு இருப்பாள் என்றால் சரியல்ல. கடுமையான வயிற்றுவலியில் அவர்கள் அப்போது அவமதிப்படுவார் என்றால் சரியல்ல, எல்லாப்பெண்களுக்கும் இருப்பதுபோல் தான் என் அக்காவுக்கும் இருந்தது. பல மாதங்களாக மாதவிடாய் வராமல் உஷாராணி சிரமப்பட்டுக்கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அவர் மிகுந்த மன உளைச்சலோடும், மன எரிச்சலோடும், கோபத்தோடும் இருப்பார் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்தின் போது உஷாராணிக்கு மாதவிடாய்போக்கில் ஒருபிரச்சனை இருக்கிறது என்பதை எதிரி ராஜாராமிடம் மறைத்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. மாதவிடாய் தாமதமாகும்பொழுது மன உளைச்சலில், மன எரிச்சலில் உஷாராணிதான் எதிரியோடு பிரச்சனை செய்வார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் எதிரி குடித்துவிட்டு வந்து உஷாராணியை

அடித்து வந்தார் என்பது தவறு, உஷாராணி சண்டை செய்வதால் தான் அவரை எதிரி குரு ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்று சிகிச்சை கொடுத்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் அக்கா இறந்த வேதனை காரணமாக அவரே தற்கொலை செய்து கொண்ட போதும் எதிரி காரணம் என்று கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சண்டை சம்பந்தமாக எந்த உறவினரை வைத்து நான் பேசினேன் என்பதை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் உறவினர்களை வைத்து பேசினோம் என்பதை சொல்லியிருக்கிறேன். சண்டை குறித்து காந்திபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்று முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் எந்த தேதியில் புகார் கொடுத்தோம் என்பதை போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்பது தற்போது ஞாபகமில்லை. உறவினர்கள் உஷாராணியின் குடும்ப விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்பதும், அவளுடைய இறப்பிற்கு முன்பே காந்திபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்பதும், இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் குடும்ப தகராறு குறித்தோ, காந்திபுரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் குறித்தோ போலீசார் விசாரணையில் விபரம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உஷாராணி இறக்கும்போது உஷாராணியின் ஆண் குழந்தைக்கு 5 வயது. உஷாராணி இறப்பிற்கு பின் உஷாராணியின் பையன் தீபன் 10ம் வகுப்பு வரைக்கும் எதிரியின் வீட்டில் வைத்து எதிரியின் பராமரிப்பில் தான் படித்தான் என்றால் சரியல்ல. 5ம் வகுப்பு படிக்கும்வரை எதிரியுடன் இருந்தான். பின்னிட்டு எதிரி கொடுமைப்படுத்திவிட்டார் என்று அந்த பையனே நேரே எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டான். போலீசில் எதிரி தரப்பில் புகார் கொடுத்துவிட்டார்கள். பின், பையனை விசாரித்து விசாரணையை முடித்து விட்டு எங்களுடைய பொறுப்பில் பையனை வைத்திருக்கிறோம். தீபன் 5ம் வகுப்பு படிக்கும்போதே நாங்கள் தான் எதிரியிடமிருந்து வலுக்கட்டாயமாக வாங்கி வந்தோம் என்றும், நாங்களே எங்கள் பராமரிப்பில் வளர்த்துவருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. உஷாராணியின் தற்கொலைக்கு எதிரி எந்தவிதத்திலும் காரணமில்லை என்றும், அதனால்தான் தீபனை அவன் 5ம்வகுப்பு படிக்கும்வரை

எதிரியின் பராமரிப்பிலே இருக்க அனுமதித்துள்ளீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. உஷாராணி இறந்த தினத்தன்று P&T Quarters ல் E block ல் நான் குடியிருந்த வீட்டில் வந்து என்னிடம் எதிரி குடித்துவிட்டு வந்து சந்தேகப்பட்டு அடிப்பதாக சொன்னார். நான் P&T Quarters லே குடியிருக்கவில்லை என்றும், P&T Quarters ல் நான் குடியிருக்கும் வீட்டுக்கு வந்து என்னிடம் எதிரியைப் பற்றி சொன்னார் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உஷாராணி எங்கள் வீட்டிற்கு வந்து எதிரியைப் பற்றி சொன்ன நேரம் காலை 9.00 மணி. உஷாராணி காலை 6.00 மணிக்கே தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டார் என்றும், 9.00 மணிக்கு வந்து எதிரியைப் பற்றி என்னிடம் சொன்னார் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உஷாராணிக்கு மாதவிடாய் பிரச்சனை இருப்பதாலும், அந்த சமயங்களில் கடுமையான வயிற்றுவலி வருவதாலும், மன எரிச்சலோடும், மன உளைச்சலோடும், கோபத்தோடும் இருப்பார் என்றும், நீண்ட வருடங்களாக இந்த கோளாறு இருந்ததால் அவரே விரக்தியால் அவரே தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. அவருடைய தற்கொலைக்கு எதிரி எந்தவிதத்திலும் காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உஷாராணி தற்கொலை செய்வதற்கு முந்தைய நாள் எதிரிக்கும், உஷாராணிக்கும் எந்தவித சண்டையும் நடைபெறவில்லை என்றும், அதனால் தான் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விடியவிடிய எதிரி குடித்துவிட்டு வந்து என் அக்காவுடன் தகராறு செய்திருக்கிறார். நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.